


தர்மசங்கடம்தான். அதர்மத்துக்குத் துணைபோனதால் வந்த தர்மசங்கடம். துராபியால் ஒசாமாவை வெளியே போங்கள் என்று சொல்லமுடியாது.

அவராகப் புரிந்துகொண்டு வெளியேறினால்தான் உண்டு. சூடானில் ஒசாமா இருக்கும் ஒவ்வொரு நாளும், அந்நாட்டின் மீது அமெரிக்கா போடப்போகிற குண்டுகளின் எண்ணிக்கையை ஒவ்வொன்றாக ஏற்றிக்கொண்டே இருக்கும்.

யார் என்ன சொன்னால் என்ன, நீங்கள் இங்கேயே இருங்கள் என்றும் சொல்லமுடியாது. அடிமடியில் வேட்டு வைக்க, அந்தரங்க சிஷ்யர்களே தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். என்னதான் செய்யலாம்? தவித்து நின்றார் துராபி.

ஒசாமாவும் யோசித்தார். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அல் காயிதாவுக்கு அப்போது பொருளாதார நெருக்கடியும் இருந்தது. ஒன்றரை மில்லியன் டாலர்கள் எள்ளானது மட்டும் காரணமல்ல. சூடானில் ஒசாமா தொடங்கியிருந்த தொழிற்சாலைகள் பலவும் நஷ்டப்பட்டு மூடவேண்டிய நிலைமைக்குப் போனது அப்போது. சூடானின் நாணய மதிப்பே, வரலாறு காணாத வீழ்ச்சியடைந்து தேசம் தடுமாறிக்கொண்டிருந்த காலகட்டம் அது. அல் காயிதாவுக்கு அதுநாள்வரை அரசுத் தரப்பிலிருந்து வந்துகொண்டிருந்த அத்தனை உதவிகளும் அடியோடு நின்றுபோனது.

இரண்டு விஷயங்கள் செய்யலாம். செலவுகளைக் கணிசமாகக் குறைப்பது ஒன்று. சூடானை விட்டு வெளியேறிவிடுவது இன்னொன்று. இரண்டில் ஒன்று என்கிற பேச்சுக்கே இடமில்லை. இரண்டையும் செய்தாக வேண்டும்.

அதற்கு வாகான சூழல் ஒன்றும் இயல்பாகவே ஏற்பட்டது.

சூடானில் இருந்த லிபிய நாட்டைச் சேர்ந்த மூன்று தீவிரவாதிகளைத் தன்னிடம் திருப்பிக்கொடுக்கும்படி லிபியா கேட்டுக்கொண்டது. சூடானுக்கு அப்போது லிபியாவுடன் நல்லுறவு இருந்தது. ஒரு கஷ்டம் என்றால் என்னவென்று கேட்கக்கூடிய தோழமை தேசமாக லிபியா மட்டுமே அப்போது இருந்தது சூடானுக்கு.

ஆகவே, லிபியா கேட்டுக்கொண்ட மூன்று தீவிரவாதிகளைச் சிறைப்பிடித்து அனுப்பிவைக்க வேண்டும். வேறு வழியில்லை.

ஆனால், அந்தத் தீவிரவாதிகள் மூவரும் ஒசாமா பின்லேடனிடம் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தார்கள். இது சூடான் அரசுக்குத் தெரியும். இப்போது லிபியாவுக்காக,

அவர்களைக் கைது செய்தால் ஒசாமாவுடன் உறவை வலிந்து முறித்துக்கொள்வதாக ஆகிவிடும்.

துராபியைத் தவிர, சூடானில் எந்த அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் அதில் எந்தச் சங்கடமும் இல்லை. எப்படியாவது ஒசாமா ஒழிந்துவிட்டால், அமெரிக்க அச்சுறுத்தலில் இருந்து தப்பித்துவிடமுடியுமே என்கிற ஒரே எண்ணம்தான் அவர்களுக்கு.

ஒசாமாவுக்கும் வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. ஐந்தாண்டு உறவு. அதனால் என்ன? என்றைக்கு இருந்தாலும் இது நடக்கும் என்று தெரிந்துதானே சூடானில் காலெடுத்து வைத்தார்?

அந்த மூன்று லிபியத் தீவிரவாதிகளையும் சூடான் அரசு கைது செய்துகொள்ள விருப்பமில்லாமல் சம்மதித்து, ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தார். அன்றோடு கதை முடிந்தது.

மூட்டை முடிச்சுகள் கட்டப்பட்டன. அல் காயிதாவின் சூடான் கூடாரங்கள் காலி செய்யப்பட்டன.

மே மாதம் 16-ம் தேதி, 1996-ம் வருடம் அல் காயிதா மீண்டும் ஆப்கனுக்கு இடம் பெயர்ந்தது.

ஆப்கனிஸ்தான் ஒன்றும் அப்போது வந்தாரை வாழவைக்கும் புண்ணியக்ஷேத்திரமாக இல்லை. தேசத்தை ஒரு ரொட்டியாக உருவகப்படுத்திக் கொள்ள முடியுமானால், இரண்டு கோஷ்டிகள் அதை ஆளுக்கொரு பக்கமாகப் பிய்த்துத் தின்றுகொண்டிருந்தன.

ஒரு பக்கம், வடக்குக் கூட்டணிப் படையினர் என்கிற முன்னாள் முஜாஹெதின்கள் ஆண்டுகொண்டிருந்தார்கள். இன்னொரு பக்கம், தெற்கே சிலிர்த்தெழுந்த தாலிபன்கள்களின் கட்டுப்பாட்டில் பெரும்பான்மையான நிலப்பரப்பு வந்துவிட்டது. சந்தேகமில்லாமல் ஒரு முழுநீள உள்நாட்டுப் போரும் புரட்சியும் வரத்தான் போகிறது.

இதில் ஒசாமாவுக்கு என்ன தர்மசங்கடம் என்றால், வடக்குக் கூட்டணியைச் சேர்ந்த குல்புதீன் ஹெக்மதியார் ஒசாமாவின் நண்பர். தாலிபன் தலைவர் முகம்மது ஓமரும் நண்பர்தான் (பின்னாளில் மாமனாரும் ஆனவர்!). இரண்டு பேருமே சோவியத் யுத்த காலத்திலிருந்து ஒசாமாவுக்குத் தெரிந்தவர்கள்.

ஆனால், அவர்கள் இருவரும் தான் இப்போது ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். நீயா, நானா? இருவரில் ஒருவர்தான் இருக்கமுடியும்; இருவரில் ஒருவர்தான் ஆளமுடியும்.

அரசியல் ரீதியில் பார்த்தால், ஹெக்மதியாருக்கு அனுபவம் அதிகம். சோவியத் படையெடுப்பின்போது போர்க்களத்தில் மிகப்பெரிய சாதனைகள் நிகழ்த்தியவர். ஆப்கன் மக்களுக்கு அவர் மீது நல்ல அபிப்பிராயம் உண்டு. ஆட்சியும் சுமாராக இருக்கத்தான் செய்தது.

ஆனாலும் ஒரு மாற்றம் வேண்டி வந்திருக்கும் தாலிபன்கள், பாகிஸ்தானில் தயாராகி, கந்தஹாருக்கு வந்தவர்கள். ஐ.எஸ்.ஐ. தயாரிப்பு. தரமானவர்கள் என்ற அர்த்தத்தில் அல்ல. பாகிஸ்தானின் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐயினால் உருவாக்கப்பட்டவர்கள் என்கிற அர்த்தத்தில். பணமாக, ஆயுதங்களாக, போர்ப்பயிற்சிகளாக அவர்களுக்குப் பாகிஸ்தான் செய்யும் ஒத்தாசைகளுக்குக் கணக்கு வழக்கு இல்லை.

கோடிக்கணக்கில் செலவு செய்து ஆப்கன் இளைஞர்களைப் பாகிஸ்தானுக்கு வரவழைத்து, தாலிபன்களின் கூடாரத்தில் அடைக்கலமாக்கி, அவர்களை ஆயுதமேந்தச் செய்யும் பாகிஸ்தானின் நடவடிக்கை, அல் காயிதாவுக்கு முதலில் கொஞ்சம் புதிராகத்தான் இருந்தது. ஆப்கனிஸ்தானில் அரசியல் மாற்றம் கொண்டுவருவதன் மூலம், பாகிஸ்தான் சாதிக்க நினைப்பது என்ன என்று அத்தனை தெளிவாகப் புரியவில்லை.

காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தானின் அக்கறையைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால், ஆப்கனில் என்ன கிடைக்கும்? அரையணாவுக்குப் பிரயோஜனமில்லாத தேசம். யார் ஆண்டாலும் வறுமை. எவர் வந்தாலும் ஏழைமை.

கண்டிப்பாக இதில் அமெரிக்காவின் தலையீடு இருந்தே ஆகவேண்டும் என்று அல் காயிதா நினைத்தது. (பின்னால் இது உண்மை என்பதும் தெரிந்தது.)

எப்படியாவது ஆப்கனிஸ்தானில் ஒரு காலை ஊன்றிவிட அமெரிக்கா நினைத்த நேரம் அது. அதற்கு எத்தனையோ காரணங்கள்.

மத்தியக் கிழக்கு தேசங்களின் எண்ணெய் வளத்தை தெற்காசிய, கிழக்காசிய தேசங்களுக்குக் கொண்டு செல்ல ஒரு பைப்லைன் திட்டம் வைத்திருந்தது அமெரிக்கா. தலையைச் சுற்றி மூக்கைத் தொடாமல், ஆப்கன் வழியே நேரடியாக அரபிக்கடல் பாதையைப் பிடித்துவிடும் திட்டம். பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா என்று அதன்பின் எங்கு வேண்டுமானாலும் எண்ணெய் பாயும்.

இது இல்லாவிட்டால், வடக்காகப் பாதை போட ரஷ்யாவிடம் தொங்கவேண்டியிருக்கும். அமெரிக்காவுக்கு அது பிடிக்கவில்லை. ஆகவே, ஆப்கனைக் குத்தகைக்கு எடுக்க விரும்பியது. கூப்பிட்ட குரலுக்கு வாலாட்டும் ஓர் ஆட்சி அங்கே அவர்களுக்குத் தேவைப்பட்டது. இதற்குப் பாகிஸ்தானின் உதவியை அமெரிக்கா கோர, அவர்கள் தாலிபன்களைத் தயார் செய்துவிட்டார்கள்!

ஆனால், இதில் அமெரிக்கா யோசிக்கத் தவறிய ஒரு விஷயம் உண்டு. முல்லா முஹம்மது ஓமர். ஒற்றைக் கண் சிவராசனுக்கு அண்ணனாகச் சில வருஷங்கள் முன் நம் மீடியாவில் கூட அவரது புகைப்படம் ஒன்று திரும்பத் திரும்ப வலம் வந்தது நினைவிருக்கிறதா?

தாலிபன்களின் தலைவர். மிகத் தீவிரமான அடிப்படைவாதி. மிக மிகத் தீவிரமான அமெரிக்க எதிர்ப்பாளர்.

முல்லா ஓமரின் அமெரிக்க எதிர்ப்பு விவகாரங்கள் எதுவும் அமெரிக்காவுக்குத் தெரியாது. யாரோ ஒரு கோயிந்தசாமியின் தலைமையில் ஐ.எஸ்.ஐ. ஒரு ஆப்கன் போராளிக் குழுவை உருவாக்கிக்கொண்டிருக்கிறது என்பது மட்டும்தான் தெரியும். அந்தக் குழுவை வைத்து ஆப்கனைப் பிடித்துவிட்டால், தன்னுடைய திட்டங்கள் அனைத்தும் பிறகு தடையின்றி நடக்கும் என்பது அமெரிக்காவின் கணக்கு.

ஆனால், ஆப்கனுக்கு ஒசாமா வந்து சேர்ந்த அன்றைய தினமே அவருக்கு விஷயம் விளங்கிவிட்டது. எப்படியும் தாலிபன்கள் ஆட்சியைப் பிடித்துவிடுவார்கள். முல்லா தான் சர்வாதிகாரியாக இருக்கப் போகிறவர். அவரது சுயரூபம் அமெரிக்காவுக்குத் தெரிந்தவுடனேயே ஆப்கனில் ஒரு யுத்தத் திருவிழா அவசியம் இருக்கும்!

ஆப்கனிஸ்தானின் தெற்குப் பகுதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிக்கொண்டிருந்த தாலிபன்கள், செப்டெம்பர் 1996-ல் காபூலையும் ஜலாலாபாத்தையும் கைப்பற்றி, ஒட்டுமொத்த ஆப்கனிஸ்தானையும் கபளீகரம் செய்து, ஆட்சிக் கட்டிலில் உட்காரும் வரை ஒசாமா, தானும் தன் குழாமும் ஆப்கனுக்கு வந்துவிட்ட விஷயத்தை முல்லாவுக்குத் தெரியப்படுத்தவே இல்லை. போர் மும்முரத்தில் இருப்பவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்கிற எண்ணம் காரணமாக இருக்கலாம்.

ஆனால், அல் காயிதா ஆப்கனுக்கு வந்த நாள் முதல், தாலிபன்கள் ஆட்சியைப் பிடித்த தினம் வரை, பல சந்தர்ப்பங்களில் வடக்குக் கூட்டணி ஆசாமிகள், ஒசாமா பின்லேடனைச் சந்தித்துக்கொண்டே இருந்தார்கள். ஹெக்மதியாரே ஒசாமாவை ஏழெட்டு முறை நேரில் வந்து

பார்த்துவிட்டுப் போனார். (அல் காயிதா முகாம் மாற்றிக்கொண்டு ஆப்கன் வருவதற்கு வடக்குக் கூட்டணியினர்தான் உதவினார்கள் என்று ஒரு தகவல் உண்டு. ஊர்ஜிதப்படுத்தமுடியாத தகவல் அது.) ஆப்கன் யுத்தத்தில் அல் காயிதாவையும் பங்குபெறச் சொல்லி ஹெக்மதியார் ஒசாமாவிடம் கேட்டார்.

ஆனால், ஒசாமா மறுத்துவிட்டார். முன்பே பார்த்தபடி, இரண்டு தரப்பினருமே அவருக்கு நண்பர்கள். யாருக்கு உதவினாலும் அடுத்தவர் மனம் நோவதுதான் லாபமாக இருக்கும். தவிரவும் அல் காயிதா போராளிகள் அமெரிக்கா என்னும் முதலையை வீழ்த்துவதற்காகத் தயாராகிக்கொண்டிருந்தார்கள். ஆப்கன் என்கிற கொசுவின் உடம்புக்குள் இருக்கும் சிறு உபாதையை ஒழிக்கவெல்லாம் அவர்களை வீணாக்கமுடியாது என்று சொல்லிவிட்டார் ஒசாமா.

ஹெக்மதியாருக்கு நிலவரம் புரிந்ததால் மேற்கொண்டு வற்புறுத்தவில்லை. வடக்குக் கூட்டணியினர் போரில் வெற்றி பெற்றால் ஒசாமா, ஆப்கனில் நிரந்தரமாக நீடூழி வாழலாம் என்று மட்டும் சொல்லிவிட்டுப் போனார்.

ஆனால் நடந்தது வேறு. ஜெயித்தது அவர்களல்ல. தாலிபன்கள்தாம்.

காபூல் விழுந்தபோது, ஆப்கன் மக்கள் காரணம் புரியாமல் குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டாடினார்கள். வண்ணப்பொடிகள் வானில் வீசப்பட்டன. தாலிபன்களைத் தோளில் வைத்துச் சுமந்துகொண்டு ஊர்வலம் போனார்கள். பட்டாசுகள் வெடித்தன. இனிப்புகள் பரிமாறப்பட்டன.

அப்பாவி மக்கள். ஒவ்வொரு ஆட்சிமாற்றத்தையும் இப்படித்தான் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். யார் குத்தியாவது அரிசி வெந்தால் போதும் அவர்களுக்கு.. ஹெக்மதியார் என்ன செய்துவிட்டார்? இந்தத் தாலிபன்கள் ஒருவேளை ஏதாவது செய்யக்கூடும். இளைஞர்கள் அதிகம் இருக்கிறார்கள். வீரர்களாகவும் இருக்கிறார்கள். ஆப்கனில் ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டுவந்தே தீருவோம் என்கிற சூளுரையுடன் ஆட்சியைப் பிடித்திருக்கிறார்கள். செய்யாமலா போய்விடுவார்கள்?

ஆரவாரத்துடன்தான் வரவேற்றார்கள். ஆனால், ஆட்சிக்கு வந்த முதல் நாளே தாலிபன்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது அவர்களுக்குப் புரிந்துபோயிற்று. ஆப்கனிஸ்தானுக்கு அடிப்படைவாதம் புதிதல்ல என்றாலும், தாலிபன்களுடைய அடிப்படைவாதத்தின் வீரியம் மிக அதிகம். ஆப்கானியர்கள் அதற்குமுன் கண்டறியாதது. ஆப்கன் என்ன, உலகின் வேறெந்த தேசமும் நவீன யுகத்தில் அப்படியொரு கொத்தடிமை வாழ்க்கையை அனுபவித்திருக்க முடியாது. முக்காடு அணிவதிலிருந்து முகச்சவரம் செய்வதுவரை, தரைபார்த்து நடக்கவேண்டுமென்பதிலிருந்து தொலைக்காட்சிகளுக்கும் திரைப்படங்களுக்கும் தடை விதித்ததுவரை எல்லா விதங்களிலும் தாலிபன்களின் யதேச்சாதிகாரம் சகிக்கமுடியாததாக இருந்தது.

ஒசாமாவுக்கு இதிலெல்லாம் எந்தப் பிரச்னையும் இல்லை. குர்ஆன் சொல்லும் வாழ்க்கை முறை. ஷரியத் சட்டதிட்டங்கள். மேற்கத்திய கலாசாரம் காற்றில் கலந்து ஊடுருவிவிடாதபடிக்கு மேலான கவனம். இதற்குமேல் என்ன வேண்டும்?

1997-ம் ஆண்டு ஜனவரி இறுதி அல்லது பிப்ரவரி முதல் வாரத்தில், தாலிபன்களின் தலைவர் முல்லா முகம்மது ஓமர், ஒசாமா பின்லேடனை அவர் தங்கியிருந்த மலைப்பகுதிக்கே நேரில் வந்து சந்தித்தார். கந்தஹாருக்கு வந்து வசிக்கும்படி அதிகாரபூர்வமாக அழைப்பு விடுத்தார்.